# <u>மயிலாடுதுறை நகராட்சி</u>

குறள்: நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை
போற்றி ஒழுகப் படும்

பொருள்: ஒருவன் நற்குணங்கள் நிறைந்திருக்கும் நிலையிலிருந்து நீங்காதிருத்தலை விரும்புவனாயின் அவன் பொறையுடைமையைப் போற்றி பாதுகாத்தல் வேண்டும்.

கூட்ட எண்: 10/2022

நகராட்சி அலுவலகம்
மயிலாடுதுறை

நாள்: 17. 10.2022

## <u>சாதாரண கூட்டம்</u>

அன்புடையீர்!

பொருள்: கூட்டம் – மயிலாடுதுறை நகராட்சி – சாதாரண கூட்டம் நடைபெறுதல் – சம்மந்தமாக.

*****

மயிலாடுதுறை நகர்மன்ற சாதாரண கூட்டம் 2022–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 19.10.2022 புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் நகர்மன்றத்தலைவர் தலைமையில் நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள நகர்மன்ற கூட்டரங்கில் நடைபெறும் சாதாரணக்கூட்டத்திற்கு தாங்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் அன்பார்ந்த

(நா. செல்வராஜ்)
நகர்மன்றத் தலைவர்,
மயிலாடுதுறை நகராட்சி.

**1)** நகராட்சி ஆணையர், பொறியாளர், நகர்நல அலுவலர் மற்றும் நகரமைப்பு அலுவலர் ஆகியோர்களின் செப்டம்பர் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் , பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் பதிவு செய்து ஒப்புதல் வழங்கலாம்.

**மன்றத் தீர்மானம் எண். 275 நாள்: 19.10.2022**

**அலுவலக குறிப்பு: பதிவு செய்து ஒப்புதல் வழங்கப்பட்டது.**

**2)** இந்நகராட்சி பொதுசுகாதாரம் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் **2016–ஆம்** ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்திற்கு நகரப்பகுதியில் தினந்தோறும், பொதுமக்கள், வணிக நிறுவனங்களில் சேரும் குப்பைகளை பெறப்பட்டு அவற்றினை நகராட்சியின் வாகனங்களில் நுண் உயிர் கிடங்கிற்கு கொண்டு செல்லப்படுகிறது. நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் கீழ்கண்டவாறு வகனங்கள் பயன்படுத்தப்படும் விபரங்கள் பின்வருமாறு,

| வ.எண் | வாகன எண் | ஓட்டுநர் பெயர்கள் |
|---|---|---|
| 1 | TN82-H 0320 | துரை (நகராட்சி தூய்மை பணியாளர் ) மாற்று பணி |
| 2 | TN82-H 0463 | கண்ணன்(நகராட்சி தூய்மை பணியாளர்) மாற்று பணி |
| 3 | TN82-H 0328 | மோகன் (நகராட்சி ஓட்டுநர்) |
| 4 | TN82-H 0390 | ஐயப்பன் (து.பணியாளர்) மாற்று பணி |
| 5 | TN82-H 0334 | முரளி (பொதுசுகாதார பிட்டர்) மாற்று பணி |
| 6 | TN82-H 0346 | சத்தியமூர்த்தி (நகராட்சி ஓட்டுநர்) |
| 7 | TN81S 8146 | |
| 8 | TNS1P 3556 | |
| 9 | TN82A 6735 | |
| 10 | TN82 - 0069 | |

மேற்படி வாகனங்களில் இரண்டு ஓட்டுநர்கள் நிரந்தரமானவர் **1** ஓட்டுநர் பிட்டர் பணியிலிருந்து மாற்று பணியில் பணிபுரிந்து வருகிறார். நகராட்சியில் காலியாகவுள்ள வாகனங்களுக்கு நிரந்தர தூய்மை பணியாளர்கள் தனியார் தூய்மை பணியாளர்கள் கொண்டு வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் போதிய அளவில் வாகனங்கள் இருந்தும் ஓட்டுநர்கள் இல்லாததால் வாகனங்கள் தொடர்ந்து இயக்கப்படாமல் அவ்வப்போது மாற்றுப்பணி ஓட்டுநர்கள்

கொண்டு தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நகராட்சியில் தொடர்ந்து இயக்கப்படாமல் இருப்பதால் குப்பைகள் ஆங்காங்கே சாலையில் தேங்கிய நிலையில் இருக்கின்றது. நகர்மன்ற உறுப்பினர் இதுகுறித்து தொடர்ந்து புகார்கள் அளித்து வருகிறார்கள்.

மாவட்ட தலைநகரமாக உள்ளதால் தொடர்ந்து அரசு அதிகாரிகள் ஆய்வுக்கூட்டங்கள் நடைபெற்று வருவதால் நகராட்சியினை தூய்மையாக பராமரிப்பு செய்திட வேண்டியுள்ளது. எனவே நகராட்சி பகுதிகளில் தொடர்ந்து தூய்மை பணிகள் தேக்கம் அடையாமல் இருப்பதற்கு வாகனங்கள் தொடர்ந்து இயக்க வேண்டியுள்ளதால் நகராட்சியில் தற்காலிக ஓட்டுநர்கள் மாவட்ட ஆட்சியர் தினசரி நாள் ஒன்றுக்கு ரூ.520/– வீதம் ஊதியம் வழங்க தற்காலிகமாக 8 ஓட்டுநர்கள் 6 மாத காலத்திற்கு நியமனம் செய்திடவும் அதற்கான செலவினத்திற்கு பொது நிதியில் மேற்கொள்ள ஆகும் செலவு தொகை ரூ.7,73,760/– வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 3809/2022/எச்1.**

**மன்றத் தீர்மானம் எண். 276 நாள்: 19.10.2022**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**3. மயிலாடுதுறை நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2022–2023ன் கீழ் கீழ்க்கண்ட பணிகளுக்கு 29.07.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.**

| வ எண் | பணியின் விவரம் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தாரர்கள் பெயர் | மதிப்பீட்டைவிட குறைவு/ மதிப்பீட்டைவிட அதிகம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தாரர் பெயர் |
|---|---|---|---|---|---|
| 1. | தீப்பாய்ந்தாள் அம்மன் கோவில் நவீன எரிவாயு தகன மேடையினை மேம்படுத்தும் பணி | 19,98000/– | M/s.Versatile Engineering Services, Mayiladuthurai. | ரூ.17,72,594/– (+) 2.46 % அதிகம் | M/s.Versatile Engineering Services, Mayiladuthurai. |
| 2. | மயிலாடுதுறை நகராட்சி அரண்மனை குளம் மேம்படுத்தும் பணி | 59,08,000/– | திரு.எஸ்.முத்துசாமி, ஒப்பந்ததாரர், மயிலாடுதுறை. | ரூ.50,98,087/– (–) 0.09 % குறைவு | திரு.எஸ்.முத்துசாமி ஒப்பந்ததாரர், மயிலாடுதுறை. |
| 3. | மயிலாடுதுறை நகராட்சி சுப்ரமணியபுரம் பூங்கா மேம்படுத்தும் பணி | 19,10,000/– | நிர்வாக நலன் கருதி ஒத்திவைக்கப்பட்டது. | | |

<u>அலுவலககுறிப்பு</u>:

1. மன்றம் அனுமதிக்கலாம்,
2. மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் வ.எண் 1 மற்றும் 2 வரையிலான பணிகளுக்கு மின்னனு முறையில் தலா ஒரு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே வரப்பெற்றுள்ளது, இவற்றை இரத்து செய்து மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் பொதுப்பணித்துறையால் வெளியிடப்பட்டுள்ள 2022–2023ம் விலைவிதப்படி மேற்கொள்ளப்படவேண்டும், இதனால் இப்பணிக்கான விலைவிகிதம் மாறுபடும், இதனால் கால விரயமும் ஏற்படும், மேலும் மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும் மதிப்பீட்டை விட குறைவாக உள்ளதால் பட்டியலில் கண்டுள்ள கலம் எண்: 6ல் குறிப்பிட்டுள்ள குறைந்த விலைவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

3. வரிசை எண். 3ல் குறிப்பிட்டுள்ள பணி நிர்வாக நலன் கருதி ஒத்திவைக்கப்பட்டதை மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண்: **1617/2022/இ1**

<u>**மன்றத் தீர்மானம் எண். 277 நாள்: 19.10.2022**</u>

**அலுவலக குறிப்பு: அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

4) மயிலாடுதுறை நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2022–2023ன் கீழ் கீழ்க்கண்ட பணிகளுக்கு 29.07.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | பணியின் விவரம் | மதிப்பீ டு ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தாரர்கள் பெயர் | மதிப்பீட்டைவிட குறைவு/ மதிப்பீட்டைவிட அதிகம் | விலை குறைப்பிற்கு பின் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தாரின் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | திம்மநாயக்கன் படித்துறை இடுகாட்டில் நவீன எரிவாயு தகன மேடை கட்டும் பணி | 1,45,40000/– | திரு.எஸ்.முத்துசாமி ஒப்பந்ததாரர், மயிலாடுதுறை. | ரூ.1,26,95,818/– (–) 0.04 % குறைவு | ரூ.12061099.66 (–)5.04% குறைவு | திரு.எஸ்.முத்துசாமி ஒப்பந்ததாரர், மயிலாடுதுறை. |

<u>அலுவலககுறிப்பு</u>:

1. மன்றம் அனுமதிக்கலாம்,
2. மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் மின்னனு முறையில் ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டுமே வரப்பெற்றுள்ளது, இதனை இரத்து செய்து மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் பொதுப்பணித்துறையால் வெளியிடப்பட்டுள்ள 2022–2023ம் விலைவிதப்படி மேற்கொள்ளப்படவேண்டும், இதனால் இப்பணிக்கான விலைவிகிதம் மாறுபடும், மேலும் காலா விரயமும் ஏற்படும், மற்றும் மேற்படி ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட குறைவாக உள்ளதால் பட்டியலில் கண்டுள்ள கலம் எண்: 6ல் குறிப்பிட்டுள்ள

குறைந்த விலைவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**ந.க.எண்: 1617/2022/இ1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 278 நாள்: 19.10.2022</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**5).** மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட தென்னமரச்சாலை AVC திருமணமண்டபத்தில் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் 10.10.2022 முதல் 17.10.2022 வரை புத்தக திருவிழா நடத்தப்படுவதை முன்னிட்டு மேற்கண்ட புத்தக திருவிழாவினை பொது மக்களுக்கு விளம்பரப்படுத்தும் வகையில் விளம்பர பேனர்கள் 2 எண்ணிக்கை, விளம்பர போஸ்டர்கள் 1000 எண்ணிக்கை மற்றும் துண்டு பிரசுரம் 1000 எண்ணிக்கை அச்சடித்து நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மற்றும் மயிலாடுதுறை மாவட்டத்திற்குட்பட்ட ஊரக பகுதிகளில் நகராட்சி மூலம் விளம்பரம் செய்யுமாறு மயிலாடுதுறை வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் 06.10.2022 தேதிய ஆய்வுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. எனவே மேற்கண்ட பணிக்கு உத்தேச செலவினம் ரூ.25000/– (ரூபாய் இருபத்தி ஐந்தாயிரம் மட்டும்)–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மாவட்ட ஆட்சியரின் உத்தரவுபடி பணியின்அவசரம் அவசியம் கருதி மன்றக்கூட்டத்தை எதிநோக்கி முன் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 4335/2022/எப்.**
**<u>மன்றத் தீர்மானம் எண். 279, நாள்: 19.10.2022</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**6)** இந்நகராட்சியின் தூய்மை பணியாளாராக பணிபுரிந்த திருமதி G. காவேரி என்பவர் 30.06.2022 அன்று வயது முதிர்வின் காரணமாக பணி ஓய்வு பெற்றுள்ளதால் அண்ணாருக்கு சிறப்பு சேமநலநிதி நகராட்சி பங்குத்தொகை ரூ. 10,000/–ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.** 02717/2022/பி4

**<u>மன்றத் தீர்மானம் எண். 280 நாள்: 19.10.2022</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**7)** இந்நகராட்சியின் துப்புரவு பணியாளாராக பணிபுரிந்த திருமதி. கோவிந்தம்மாள் என்பவர் **30.06.2022** அன்று வயது முதிர்வின் காரணமாக பணி ஓய்வு பெற்றுள்ளதால் அண்ணாருக்கு சிறப்பு சேமநலநிதி நகராட்சி பங்குத்தொகை ரூ. **10,000/-**ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.** 02718/2022/பி4

**<u>மன்றத் தீர்மானம் எண். 281 நாள்: 19.10.2022</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**8)** இந்நகராட்சியின் தூய்மை பணியாளாராக பணிபுரிந்த திரு. T. சுப்பையன் என்பவர் **30.06.2022** அன்று வயது முதிர்வின் காரணமாக பணி ஓய்வு பெற்றுள்ளதால் அண்ணாருக்கு சிறப்பு சேமநலநிதி நகராட்சி பங்குத்தொகை ரூ. **10,000/-**ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.** 02717/2022/பி4

**<u>மன்றத் தீர்மானம் எண். 282 நாள்: 19.10.2022</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**9)** மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட துலா கட்டத்தில் ஐப்பசி மாதம் **2022**ம் ஆண்டிற்கு துலா உற்சவ விழாவிற்கு பார்க்அவென்யூ சாலையின் தென்புறம் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் தற்காலிகமாக விழா கடைகள் **50** நாட்களுக்கு மட்டும் **(11.11.2022** முதல் **30.12.2022** வரை**)** அமைத்தல் கொள்ளும் உரிமத்திற்கு **14.10.2022** அன்று நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கீழ்கண்டுள்ளவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே பெறப்பட்டுள்ளது.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | 50 நாட்களுக்குரிய தற்காலிக விழா கடைகள் அமைத்துக்கொள்ள ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|
| **1.** | திரு.V. முனுசாமி,<br>**34**, மேல ஒத்தசரகு,<br>கூறைநாடு , மயிலாடுதுறை | **ரூ.3,63,017/-** |
| **2.** | திரு.R.சற்குருநாதன்,<br>25/3B, பில்டெக் காலணி வடக்கு வீதி,<br>திருவிழந்துார் , மயிலாடுதுறை | **ரூ.2,50,000/-** |

மேற்கண்ட ஒப்புந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்.1ல் குறிப்பிட்டுள்ள திரு.V. முனுசாமி, 34, மேல ஒத்தசரகு, கூறைநாடு, மயிலாடுதுறை என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தொகை சென்ற ஆண்டு ஒப்பந்தப்புள்ளி தொகையைவிட ரூ.5000/– அதிகமாகவும் மூன்றாண்டு சராசரி தொகையை விட ரூ.13,670/– கூடுதலாக உள்ளதால் மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்.3530/2022/அ2**

**<u>மன்றத் தீர்மானம் எண். 283 நாள்: 19.10.2022</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**10)** மயிலாடுதுறை நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவிற்கு 2022–2023–ஆம் ஆண்டிற்கு தேவையான தளவாட பொருட்கள் சப்ளை செய்திடுவதற்கு 07.10.2022–அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | மதிப்பீடு ரூ | ஒப்பந்தப்புள்ளி அறித்துள்ள நிறுவனத்தின் பெயர் | தளவாட பொருட்கள் 1 முதல் 18 வரை (ஒப்புநோக்கு பட்டியல்) லட்சம் | குறைவாக அறித்துள்ள நிறுவனம் |
|---|---|---|---|---|
| 1 | 9.75 லட்சம் | ஸ்ரீ சரவணா ஹார்ட்டுவேர்ஸ், குத்தாலம் | 9.74 | ஸ்ரீ சரவணா ஹார்ட்டுவேர்ஸ், குத்தாலம் |
| 2 | | தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் | 9.75 | |

மேற்கண்ட இரண்டு நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியலின்படி, வ.எண். (1)–ல் கண்டுள்ள ஸ்ரீ சரவணா ஹார்ட்டுவேர்ஸ், குத்தாலம் என்ற நிறுவனம் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதால் இதனை ஏற்கலாம்.

<u>அலுவலக குறிப்பு:</u>

1. அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி, பொது சுகாதாரப்பிரிவில் தளவாட பொருட்கள் இருப்பில் இல்லாததாலும் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீசரவணா ஹார்டுவேர்ஸ் குத்தாலம் என்ற நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3386/2022/எச்1)**

**<u>மன்றத் தீர்மானம் எண். 284 நாள்: 19.10.2022</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**11)** மயிலாடுதுறை நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவிற்கு 2022–2023–ஆம் ஆண்டிற்கு தேவையான கிருமி நாசினி பொருட்கள் சப்ளை செய்திடுவதற்கு 07.10.2022–அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | மதிப்பீடு ரூ | ஒப்பந்தப்புள்ளி அறித்துள்ள நிறுவனத்தின் பெயர் | கிருமிநாசினி பொருட்கள் 1 முதல் 11 வரை விலைவிகிதம் | குறைவாக அறித்துள்ள நிறுவனம் |
|---|---|---|---|---|
| 1 | 5.00 லட்சம் | ஸ்ரீ சரவணா ஹார்டுவேர்ஸ், குத்தாலம் | ரூ. 499432/– | ஸ்ரீ சரவணா ஹார்டுவேர்ஸ், குத்தாலம் |
| 2 | | தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் | ரூ. 500464.50 | |

மேற்கண்ட இரண்டு நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியலின்படி, வ.எண். (1)–ல் கண்டுள்ள ஸ்ரீ சரவணா ஹார்டுவேர்ஸ், குத்தாலம் என்ற நிறுவனம் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதால் இதனை ஏற்கலாம்.

<u>அலுவலக குறிப்பு:</u>

1. அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி, வருவது மழைக்காலம் என்பதாலும், கிருமிநாசினி பொருள்கள் இருப்பில் இல்லாததாலும் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீசரவணா ஹார்டுவேர்ஸ் குத்தாலம் என்ற நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2627/2022/எச்1)**

**<u>மன்றத் தீர்மானம் எண். 285 நாள்: 19.10.2022</u>**

**அலுவலக குறிப்பு: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**12) இந்நகராட்சி 15–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி. ஜெயந்தி உதயகுமார் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்.**

1. தனது வார்டு கச்சேரி ரோடு தபால் நிலையத்திலிருந்து பழங்காவேரி வரையிலான சாலை மழைநீர் வடிகாலினை சீர் செய்து மனைநீர் தடையின்றி செல்வதற்கு வழிவகை செய்திட வேண்டுவது.

2. தனது வார்டுக்குட்பட்ட வேலாயுதம்பிள்ளை நகரில் உள்ள பூங்காவை சீர்செய்து பொதுமக்கள் பயன்படுத்திடும் வகையில் பணிகள் செய்வதற்கு வழிவகை செய்திட வேண்டுவது.

3. தனது வார்டுக்குட்பட்ட தெருக்களில் உள்ள பழுதடைந்த மின் விளக்குகள் மாற்றி புதியதாக மின்விளக்குகள் மற்றும் புதியதாக மின்விளக்குகள் மற்றும் புதியதாக ஐந்து மின் விளக்குகள் பிட்டிங்கள் அமைத்திட வேண்டி

4. தனது வார்டு உட்பட்ட முதலியார் தெருவில் சாலையினை புதிதாக தார்சாலை அமைத்திட வேண்டி

5. தனது வார்டுக்குட்பட்ட கல்லறைத்தொப்பு தெரு, ரஸ்தாமணவெளித்தெருவில் புதிதாக மின்பவர் பம்பு அமைத்திட வேண்டி

**அலுவலகக்குறிப்பு:**

நகராட்சியில் தற்போது நிதி ஆதாரம் போதிய அளவில் இல்லாததால், மாநில அரசின் நிதிகள், நமக்கு நாதே மேம்பாடு திட்டநிதி, கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு நிதி போன்ற நிதிகள் கிடைக்க பெற்றதும் பணிகள் செய்திட அனுமதி அளிக்கப்பட்டது.

குடிநீர் சம்பந்தமான பணிகளை குடிநீர் திட்ட நிதியினை செய்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டது.

**ந.க.எண். 3056/2022/எச்1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 286 நாள்: 19.10.2022</u>**

**அலுவலக குறிப்பு: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**13) இந்நகராட்சி 35–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு. செ. செந்தில்குமார் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்:–**

1. தனது வார்டு உட்பட்ட சுப்ரமணியத்தில் உள்ள நகராட்சி பூங்காவை மேன்மைப்படுத்தி விடுதலைப்போராட்ட வீரர் தியாகி அருணாச்சலம் பிள்ளை பெயரை வைப்பதற்கு மன்றம் தீர்மானிக்க வேண்டி
2. தனது வார்டு உட்பட்ட வரதாச்சாரியார் தெருவில் உள்ள சிமெண்ட் கான்கிரீட் ரோடு பழுதடைந்து உள்ளதை சீர் செய்து புதிய தார்சாலை அமைத்திட வேண்டி
3. தனது வார்டுக்குட்பட்ட சுப்ரமணியபுரம் உள்ள தெருக்கள் மிகவும் பழுதடைந்து உள்ளதை சீர்செய்து புதிய தார்சாலை அமைத்திட வேண்டி
4. தனது வார்டில் உள்ள மினிபவர் பம்புகள் பழுதடைந்துள்ளதை பழுதுநீக்கம் செய்திட வேண்டி.
5. தனது வார்டில் தெருவிளக்குகள் பகுதிகளுக்கு புதிதாக மின்விளக்குகள் அமைத்திட வேண்டி
6. புது வெள்ளாந்தெருவில் மின்விளக்கு இல்லாததற்கு புதியதாக மின்விளக்குகள் அமைத்து தர வேண்டி

மேற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றி அனுமதி வேணிடி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**ந.க.எண்.3056/2022/எச்1.**

**<u>மன்றத் தீர்மானம் எண். 287 நாள்: 19.10.2022</u>**

அலுவலக குறிப்பு: **வ.எண்.1–ல் உள்ள பூங்காவிற்கு பெயர் சம்மந்தமாக பூங்கா மேம்பாடு பணிகள் முடிவு பெற்றதும் பெயர் சம்மந்தமாக தனியாக தீர்மானம் கொண்டுவருவதற்கு தீர்மானிக்கப்பட்டது. மற்ற பொருட்களுக்கு நிதிநிலைக்கு ஏற்ப பணிகள் செய்திட தீர்மானிக்கப்பட்டது.**

**14) இந்நகராட்சி 5–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு. ரா. ரமேஷ் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்:–**

1. துலா உற்சவ பெருவிழா நடைபெற உள்ளதால் தனது வார்டுக்குட்பட்ட காவேரி ஆற்றங்கரையில் உள்ள குப்பைகளை சுத்தப்படுத்திட வேண்டி.
2. தனதுவார்டுக்குட்பட்ட வள்ளலார்கோயில் நான்கு வீதிகளையும் தூய்மை படுத்த வேண்டி.
3. தனதுவார்டுக்குட்பட்ட பூம்புகார் ரோடில் Drainage அமைக்கும்பணியை துரிதப்படுத்த வேண்டி.
4. தனதுவார்டுக்குட்பட்ட பூம்புகார் சாலை குருமூர்த்தி நடுநிலைப்பள்ளி எதிரில் உள்ள வடிகால் முதல் துர்க்கையம்மன்கோயில் செல்லும் பாதை வரை உள்ள வடிகால் தூர்வார வேண்டி.
5. துர்க்கையம்மன் கோயிலிருந்து மேற்கு தெரு போகும் சந்து வரை மழை நீர் சூழ்ந்து நிற்கிறது அதனை சரிசெய்ய வேண்டி.

**மன்றத் தீர்மானம் எண். 288 நாள்: 19.10.2022**

**அலுவலக குறிப்பு: பதிவு செய்யப்பட்டது. நிதிநிலைக்கு ஏற்ப பணிகள் செய்திட தீர்மானிக்கப்பட்டது.**

**15) இந்நகராட்சி 19–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி. கீதா செந்தில்முருகன் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்:-**

1. தனது வார்டுக்குட்பட்ட கீழ உடையார்தெரு படித்துறை அருகில் ஈமச்சடங்கு மண்டபம் அமைத்து தர வேண்டி.

2. தனது வார்டுக்குட்பட்ட மேல உடையார்தெரு (Extension) கற்பக விநாயகர் தெரு மற்றும் L B நகர் Parallel ரோடு டார்க்கெட் பள்ளி ஹாஸ்டல் ரோடு இவைகளுக்கு பேவர் ஃபுளோர் டைல்ஸ் ரோடு அமைத்து தர வேண்டி.

**மன்றத் தீர்மானம் எண். 289, நாள்: 19.10.2022**

**அலுவலக குறிப்பு: பதிவு செய்யப்பட்டது. நிதிநிலைக்கு ஏற்ப பணிகள் செய்திட தீர்மானிக்கப்பட்டது.**

**16) இந்நகராட்சி 20–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி. தனலெட்சுமி அரங்கநாதன் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்:–**

1. தனது வார்டுக்குட்பட்ட திருவள்ளுவர் நகர் 18–வது வார்டு தெற்கு குமரக்கட்டளைத்தெரு இணையும் பித்திரா குளக்கரையில் இடிந்து விழும் நிலையில் உள்ள 72 அடி நீளமும், 14 அடி அகலமும் உள்ள கழிப்பறையை அகற்றிவிட்டு பொதுமக்களுக்கு பயன்படும் வகையில் தரமான தார்சாலை அமைத்திட வேண்டி.

2. தனது வார்டுக்குட்பட்ட தோப்பு கொத்த தெருவில் உள்ள தார் சாலையை பருவ மழைக்குமுன் புதுப்பித்து தர வேண்டி.

3. அண்ணா நகரில் பருவமழை காலங்களில் பக்க கால்வாய்களை தூர்வாரி தர வேண்டி.

**<u>மன்றத் தீர்மானம் எண். 290, நாள்: 19.10.2022</u>**

**அலுவலக குறிப்பு: பதிவு செய்யப்பட்டது. நிதிநிலைக்கு ஏற்ப பணிகள் செய்திட தீர்மானிக்கப்பட்டது.**

**17.** நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை –28 அவர்களின் ந.க.எண். 24470/2022/MA2. நாள்.08.08.2022– ந்தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளபடி, அரசாணை (நிலை) எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை, நாள்.24.06.2022–ல் தெரிவித்துள்ளபடி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 24–B, 24-H மற்றும் மாநகராட்சிகள் சட்டம் பிரிவுகளின்படி வார்டு குழு (Ward Committee) மற்றும் பகுதி சபா (Area Sabha) உருவாக்குவதற்கும் மற்றும் அதன் செயல்பாடுகளுக்கும் விதிகள் உருவாக்கப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அரசாணை எண்.93 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்,24.06.2022–ன்படி வார்டு குழு மற்றும் பகுதி சபா செயலாளர் நியமிப்பது குறித்து அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி இரண்டு அரசாணைகளையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அரசாணை மன்றம் பதிவு செய்யலாம்.

ந.க.எண்.3384/2022/எச்12

**<u>மன்றத் தீர்மானம் எண். 291, நாள்: 19.10.2022</u>**

**அலுவலக குறிப்பு: பதிவு செய்யப்பட்டது**

நாள்:19.10.2022

நகர்மன்றத் தலைவர்,
மயிலாடுதுறை நகராட்சி.